மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.08.2026

Volume 9 | Issue 9 | July – August 2026

# Sacrifice and worship in Sangam literature

**Dr. M. Athiththachozhan**

Assistant Professor, Department of Science and Humanities,
Dhaanish Ahmed Institute of Technology, Coimbatore -05.
athiththachozhan@gmail.com, Contact No : 76397 81632.

## Abstract

sacrifice in the religious and social life of tamil people showing Sangam literature is important place This article examines the sacrifice of God in detail. There are reports that Murugan, the land goddess of Kurunji, had been created with a blood clothed in Mullai, millet and meat. The country's flag of power, Veera Murasu, has been given information about the

biotic and associated vascular nature of the war. Furthermore, the article also reveals that the mountains were believed to be inhabited by gods through natural sacrifice and that they were invaded.

**Key Words: Dambali, Chilbali, Adoni**

# சங்க இலக்கியப் பதிவுகளில் பலியிடுதலும் வழிபாட்டு முறைகளும்

**முனைவர் ம.ஆதித்தசோழன்,**

உதவிப்பேராசிரியர், அறிவியல் மற்றும் மனிதநேயத்துறை,

தானிஷ் அகமது தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் -05,

athiththachozhan@gmail.com, அழைப்பு : 76397 81632.

## ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழரின் சமய மற்றும் சமூக வாழ்வில் பலியிடுதல் என்பது மிக முக்கியமான இடத்தை வகித்துள்ளது. இக்கட்டுரை தெய்வப் பலியிடுதல் குறித்து விரிவாக ஆராய்கிறது. இதில் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்கும், முல்லை நிலத்தில் கொற்றவைக்கும் வழங்கப்பட்ட குருதி கலந்த பலிச்சோறு, தினை, மாமிசம் போன்ற உணவுகள் வைத்துப் படைக்கப்பட்ட செய்திகள் இடம்பெற்றுள்ளன. நாட்டின் அதிகாரக் குறியீடாக விளங்கிய வீர முரசுக்கு, போரில் வெற்றி வேண்டிப் படைக்கப்பட்ட உயிர்ப்பலி மற்றும் அதனுடன் தொடர்புடைய குருதிச்சோறு பற்றிய தகவல்கள் கூறப்பட்டுள்ளன. மேலும், இயற்கைப் பலியிடுதல் மூலம் மலைகளில் தெய்வங்கள் உறைந்திருப்பதாக நம்பப்பட்டு அவற்றுக்குப் படையல்கள் வைக்கப்பட்டன என்ற செய்தியும் இக்கட்டுரையில் ஆழமாக ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொல்**: தேம்பலி, சிறுமறி, சில்பலி, அதிகற், உயர்பலி

## முன்னுரை

ஆரம்ப காலத்தில் மனிதர்கள் இயற்கையோடு ஒன்றிய, எளிய வாழ்க்கை முறையை வாழ்ந்து வந்தனர். குறிப்பாக, பழங்குடி மற்றும் நாட்டுப்புற மக்கள் தொன்றுதொட்டு காலம் காலமாக இயற்கையை வணங்கி வழிபடும் வழக்கத்தைத் தங்கள் முன்னோர்களிடம் இருந்து வழிவழியாகப் பின்பற்றி வந்தனர். இருப்பினும், காலப்போக்கில், இயற்கையில் அவ்வப்போது நிகழும் மாற்றங்களான புயல், பெரும் வெள்ளப் பெருக்கு, நிலநடுக்கம், அத்துடன் கொடிய மற்றும் ஆபத்தான காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் போன்ற எண்ணற்ற காரணங்களால் மக்கள் இயற்கைக்கு ஒரு பேராற்றல் அல்லது சக்தி இருக்கிறதென்று நம்பத் தொடங்கினர். அந்தச் சக்தியை அமைதிப்படுத்தவும், அவற்றிடமிருந்து வரும் துன்பங்களைத் தடுத்துப் பாதுகாத்துக்கொள்ளவும் அவற்றை வழிபடத் தொடங்கினர். இதன் காரணமாகவே, இயற்கையை வழிபடுவது என்பது ஒருவித அச்சத்தின் சாயலுடனும் கூடியதாக மாறியது. இவற்றில், சங்க இலக்கியங்களில் மனிதன் தெய்வத்திற்கும், பறவைக்கும், இயற்கைக்கும் எவ்வாறெல்லாம் படையலிட்டு வழிபாடு செய்கிறான் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. மேலும், இவ்வாய்வுக் கட்டுரையில் பலியிடுதலின் விளக்கம், முருகனுக்குப் பலியிடுதல், காமனுக்குப் பலியிடுதல், பேய்க் கடவுளுக்குப் பலியிடுதல், பொதுத் தெய்வங்களுக்குப் பலியிடுதல், காக்கைக்குப் பலியிடுதல், முரசுக்குப் பலியிடுதல் மற்றும் மலைக்குப் பலியிடுதல் என்னும் பல்வேறு நிலைகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## பலியிடுதல்

நாட்டுப்புற மக்கள் தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளும் வழிபாட்டு நெறிகளும் அந்தந்தத் தெய்வங்களின் தன்மைக்குத்

தகுந்தவாறு வேறுபடும். ஒவ்வொரு தெய்வமும் தனக்கெனத் தனித்த வழிபாட்டு முறைகளையும் மரபுகளையும் கொண்டிருக்கும். சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடலும் மாமிசப் படையலும் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. பலியிடுதல் என்பது தொன்றுதொட்டு மனித நாகரிகத்தில் இருந்து வரும் ஒரு சடங்கு முறையாகும். "ஓர் உயிரைக் கொடுப்பதன் மூலம் இன்னொரு உயிர் காப்பாற்றப்படுகிறது" அல்லது இயற்கையின் சீற்றத்திலிருந்து சமூகம் காக்கப்படுகிறது என்ற நம்பிக்கை இதன் பின்னணியில் உள்ளது. பலியிடுதலின் வாயிலாக இயற்கையையும் தெய்வங்களையும் திருப்திப்படுத்தவும், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் முடியும் என்று மக்கள் நம்பினர். தெய்வங்களுக்கு ஆட்டுக்கிடாய் பலியிடப்பட்டதையும், குருதி கலந்த உணவு படைக்கப்பட்டதையும் சங்க இலக்கியப் பாடல்கள் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளன.

## தெய்வம்

ஆரம்பகாலத்தில் மனிதன் தனக்கு வாழ்வாதாரம் அளித்த பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்ற இயற்கையைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினான். மனிதனுக்கு நலமும் வளமும் உண்டாகத் தெய்வத்திற்குப் படையல் பொருளாகச் சில உணவுப் பொருட்களை வைத்து வழிபடத் தொடங்கினான். அதுபோலச் சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு தெய்வங்களுக்குப் படையலிட்டு வழிபட்டு வந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. குறிப்பாக முருகனுக்குப் பலியிடுதல், காமனுக்குப் பலியிடுதல், பேய்க்கோவிலுக்குப் பலியிடுதல், தெய்வத்திற்குப் பலியிடுதல் போன்ற பல வகையான பலியிடுதல் முறைகள் பற்றிச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அவைக் குறித்த விரிவான பார்வையைப் பின்வருமாறு காணலாம்.

## முருகன் பலியிடுதல்

சங்க காலத்தில் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்குச் சேவல் கொடியும், வெட்சி மலரும் உரியனவாகப் போற்றப்பட்டதைப் போலவே, அவருக்குச் செய்யப்படும் வழிபாடுகளும் மிகவும் சிறப்புடையதாக விளங்கின. குறிஞ்சி நில மக்கள் தங்களின் வெற்றியையும், வளத்தையும், இன்னல்கள் நீங்குவதையும் வேண்டி முருகனுக்குச் சேவல், ஆட்டுக்கிடாய் போன்றவற்றைப் பலியிட்டும், குருதி கலந்த சோற்றைப் படையலாகப் படைத்தும் வழிபட்டுள்ளனர். இதனைச் சங்க இலக்கியப் பாடல்கள் பல்வேறு இடங்களில் விரிவாகப் பேசுகின்றன.

"குன்றக் குறவன் காதல் மட மகள்
மன்ற வேங்கை மலர் சில கொண்டு
மலை உறை கடவுள் குல முதல் வழுத்தி
தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள்"[1]

இப்பாடலில், குறவனின் அன்புக்குரிய இளமகள், மன்றத்திலுள்ள வேங்கை மரத்தின் மலர்களைப் பறித்து, மலர்களைத் தூவி, மலை மீது உறைந்துள்ள குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்குத் தேனைப் பலியாகக் கொடுத்து வழிபட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இயற்கைப் பொருட்களையும் தேனையும் வழிபாட்டிற்காகப் பயன்படுத்திய தமிழர்களின் மரபு இதன் மூலம் புலப்படுகிறது.

"பல்வேறு உருவின் சில்அவிழ் மடையோடு
சிறுமறி கொன்று, இவள் நறுநுதல் நீவி
வணங்கினைக் கொடுத்தி ஆயின்"[2]

முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தும் நிகழ்வைக் குறிக்கும் இப்பாடலில், பல நிறங்களையுடைய சோற்றுடன், சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று பலியிட்டு, முருகனை வணங்கித் தொழுதால் துன்பங்கள் நீங்கும் என்ற நம்பிக்கையைக் குறுந்தொகை உணர்த்துகிறது. சிறு தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலியும் மாமிசப்

படையலும் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதை இது காட்டுகிறது.

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து"[3]

முருகனுக்குக் குறமகள் வெறியாட்டு நடத்துவதைத் திருமுருகாற்றுப்படை மிகத் துல்லியமாக விவரிக்கிறது. தெய்வமாடும் குறப்பெண், செந்நூலைக் கையில் காப்புக் கட்டி, வெண்பொரியைத் தூவி, வலிமை மிக்கதும் பெரிய கால்களையுடையதுமான கொழுத்த ஆட்டுக் கிடாயின் குருதியோடு பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பலியிடத்தில் வைப்பாள். மேலும், சிறிய பசுமஞ்சளோடு நறிய வாசனைத் திரவியங்களையும் தெளித்து முருகனை மனமுருகிப் போற்றுவாள் என்று இப்பகுதி விளக்குகிறது.

## காமனுக்குப் பலியிடுதல்

தமிழர்களின் பண்பாட்டில் காமன் வழிபாடு என்பது காதலுடனும் வசந்த காலத்துடனும் நெருங்கிய தொடர்புடையது. காமவேள் என்று அழைக்கப்படும் மன்மதனுக்குச் செய்யும் வழிபாடுகளில் படையல் இடும் முறைகளும் இடம்பெற்றுள்ளன. மக்கள் தங்கள் வாழ்வில் காதல் கைகூடவும், குடும்ப நலம் பெருகவும் காமனுக்குரிய பலிகளையும் படையல்களையும் செலுத்தி வழிபட்டுள்ளனர்.

"படை இடுவான் மன் கண்டீர், காமன் - மடை அடும்
பாலொடு கோட்டம் புகின்"[4]

தலைவியின் இணையற்ற அழகை வருணிக்கும் பொருட்டு, தேவலோகப் பெண்களான உருப்பசியும் திலோத்தமையும் கூடத்

தங்களது அழகையெல்லாம் இவளுக்குக் கொடுத்துவிட்டார்களோ என்று வியக்கும் அளவிற்கு அவளது அழகு உள்ளது. அது அறியாமல் இவள், தெய்வத்திற்குப் படைக்கும் பாலுடன் காமன் கோயிலுக்குச் சென்றால், அங்கே காமவேளும்கூட இவளது அழகைக் கண்டு நெஞ்சம் அழிந்து தனது படைக்கலன்களைக் கீழே போட்டுவிடுவான் என்று ஆசிரியர் தலைவியின் அழகை மிகைப்படுத்திப் பாடியுள்ளார். இதன் மூலம் காமன் கோயிலுக்குப் பால் போன்ற பொருட்கள் படையலாகச் செலுத்தப்பட்டதை அறிய முடிகிறது.

## பேய்க்கோவிலுக்குப் பலியிடுதல்

சங்க காலத்தில் மக்கள் இயற்கையின் கோபத்திலிருந்தும், நோய்களிலிருந்தும், போர்க் கால ஆபத்துகளிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ளப் பேய்க் கடவுள்களையும் அச்சம் தரும் முதிய தெய்வங்களையும் வழிபாட்டுக்குரியவர்களாக ஏற்றுக் கொண்டனர். பேய்க்கோவில்கள் அல்லது பேய் உறைவதாக நம்பப்பட்ட இடங்களில் இரத்தப் பலி மற்றும் மாமிசப் படையல்கள் வழங்கப்பட்டன.

"ஊட்டுஅரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டுஎதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,
புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்று"[5]

பாழி நகர் என்பது உயிர்களைப் பலி கொடுக்கும் தொன்மையான மரபினை உடையதாகும். பேய்க்கோவிலில் பேய்த் தெய்வத்திற்கு மிஞிலி என்பவன் உயிர்ப்பலி கொடுப்பதாக வாக்களித்தான். தான் அளித்த வாக்கின்படி பேய்த் தெய்வத்திற்கு அதிகனைப் பலி கொடுத்துவிட்டு, வெற்றிக் களிப்பில் தன் வாளைச் சுழற்றிக்கொண்டு ஆடினான் என்று அகநானூறு குறிப்பிடுகிறது. பேய்களின் சீற்றத்தைத் தணிப்பதற்காகவும், போரில் வெற்றி பெறவும் மனித உயிர்கூடப்

பலியிடப்பட்ட கொடூரமான சடங்கு முறைகளை இப்பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

## தெய்வத்திற்குப் பலியிடுதல்

சங்க காலத்தில் பல்வேறு தெய்வங்களுக்கும் சிறுதெய்வங்களுக்கும் பலியிடும் வழக்கம் இருந்ததைப் போலவே, பொதுவான தெய்வ வழிபாடுகளிலும், இயற்கைத் தெய்வ வழிபாடுகளிலும் படையலிடுதல் ஒரு முக்கியச் சடங்காக இருந்துள்ளது. மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் நீங்கவும், மழை வேண்டியும், கருவுற்ற பெண்கள் நலமுடன் இருக்கவும், போரில் வெற்றி பெறவும் பல்வேறு தெய்வங்களுக்குப் பலி மற்றும் படையல் கொடுத்தனர். உயிர்ப்பலி வழங்குதல், குருதிச் சோற்றைப் படைத்தல், தினை தூவுதல், மீன் உணவு படைத்தல் போன்ற பல்வேறு சடங்குகள் சங்க கால மக்களிடம் வேரூன்றியிருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

"கலி கெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலி கண் மாறிய பாழ்படு பொதியில்"[6]

வடபுலத்து மன்னர் வருந்தக் கொடிய வெண்மையான போர் செய்பவனே, இசை பொருந்திய தெய்வங்கள் தாம் உறைந்த தூண்களிலிருந்து அகலும் பொழுதும், தாம் பலி பெறும் இடங்களை மாற்றிக்கொள்ளும் பொழுதும் நீ இத்தகைய போரைச் செய்தல் சரியல்ல என்று ஆசிரியர் இப்பாடலில் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.

"மலை வான் கொள்க என உயர் பலி தூய்
மாரி ஆன்று மழை மேக்கு உயர்க எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்"[7]

குறவர் இன மக்கள் மழை பொழிய வேண்டும் என்று தினையைப் பலியாகத் தூவினர்; அதனால் மழை பொழிந்தது. பின்னர் மழை நிற்பதற்காகக் கடவுளுக்கு விழா எடுத்து மழையை நிறுத்தினர். இப்பாடலில் மழை பொழியத் தினைத் தூவிய செய்தியையும், மழை நிற்க வைக்க விழா எடுத்த செய்தியையும் புறநானூறு குறிப்பிடுகின்றது.

"வேனில் முருக்கின் விளை துணர் அன்ன
மாணா விரல வல் வாய்ப் பேஎய்
மல்லல் மூதூர்; மலர்ப் பலி உணீஇய
மன்றம் போழும்"[8]

கோடைக்காலத்தில் செம்முருக்க மரத்தின் பூங்கொத்தில் காய்த்துப் பழுத்து முற்றிய நெற்றுப் போன்ற, பெருமையற்ற விரல்களையும் வலிய வாயையுமுடைய பேய், வளமைமிக்க பழைமையான ஊரிடத்தே தெய்வத்திற்கு வழிபாட்டோடு இடப்படும் ஊன் விரவிய பலிச் சோற்றை உண்பதற்காகத் தான் வாழும் பாழான மன்றத்தை இடித்துக்கொண்டு எழுவதாக ஆசிரியர் இப்பாடலில் உவமையாகக் கூறுகிறார்.

"தும்பை சான்ற மெய் தயங்கு உயக்கத்து
நிறம் படு குருதி புறம்படின்"[9]

மார்பில் தும்பைப் பூ அணிந்த வீரர் தம் மார்பினைக் களம் கிழித்ததால் உண்டான குருதி, வீரத்தின் வெளிப்பாடாகவும் தெய்வத்திற்குப் பலியாகவும் அளிக்கப்பட்டுள்ளச் செய்தியை இப்பாடல் விளக்குகிறது.

"காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோன்சுவர்ப்
பாவையும் பலிஎனப் பெறாஅ நோய் பொர"[10]

உடன்போக்கிற்குச் சென்ற மகளை நினைத்துச் செவிலித்தாய் பெரிதும் வருந்தித் தன் மகளாகிய தலைவியின் தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியின் பிரிவால் பூஞ்செடிகளையுடைய தொட்டிகளும் மலர்களை மலர்விக்கவில்லை. சுவரின்கண் முத்துவடம் பதித்து அழகுறத் திகழ்ந்த கடவுட் பாவைகளும் தமக்குரிய பலியாகத் தேனையும் பெறவில்லை என்று தாய் வருந்திக் கூறுவதாகச் சங்கப் புலவர் பாடியுள்ளார்.

"புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப"[11]

முப்புரிநூலை அணிந்த அந்தணர்கள் அவ்விழாவில் சிவபெருமானுக்குப் பலிப்பொருள் அடங்கிய பொற்கலங்களையும் பிறவற்றையும் கைகளில் ஏந்திப் படைப்பதற்காக நின்றனர் என்று இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

"தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவீர்"[12]

வாடாத தும்பைச் சூடிய போரில் திறமையான வீரர் புறங்கொடுத்து ஓடாத படையையுடையவனும் ஆகும். எயிற்றியர் புல்லரிசிச் சோற்றைக் கருவாட்டோடு சேர்த்துத் தெய்வத்திற்குப் பலியிடுமாறு தேக்கிலையில் குவித்துத் தருவர். சங்க காலத்தில் தெய்வ வழிபாட்டுப் படையலில் மீனும் உணவுப் பொருளாக வைக்கப்பட்டிருந்தமைக்கான அறிய செய்தி இதன் மூலம் கிடைக்கிறது.

"கடுஞ்சூல் மகளிர் பேணி கை தொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப"[13]

முதன்முதலாகக் கருவுற்ற பெண், தேவராட்டியுடன் தெய்வங்களுக்குப் படையல் தந்து வழிபடுவதாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் முதல் கர்ப்பம் தரித்த பெண்கள்

தெய்வத்திற்குப் படையல் வைத்து வழிபடும் வழக்கம் சங்க காலத்தில் சிறந்து விளங்கியதைக் காண முடிகிறது.

## காக்கைக்குப் பலியிடுதல்

இறக்கைகள் கொண்ட இருகாலியைப் பறவை எனக் கூறுவர். பொதுவாக பறவைகள் முதுகெலும்புடைய, இளஞ்சூட்டுக்குருதியுடைய, இறகுகளுடைய, முட்டையிட்டு இனம் பெருகும் உயிரினமாகும். அவற்றுள் பறவை இனங்களில் ஒன்றான காக்கை, தமிழர் பண்பாட்டில் வெறும் உயிரினமாக மட்டும் பார்க்கப்படாமல், இயற்கை மற்றும் ஆன்மீகத்தோடு பிணைந்த ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் காக்கைகளைத் தெய்வத்தன்மை உடையவையாகவும், தங்களின் முன்னோர்களின் வடிவமாகவும் கருதிப் போற்றினர். சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இந்த வழிபாடு இன்றும் நம்மிடையே நடைமுறையில் உள்ளது. குறிப்பாகத் திதி போன்ற காரியங்களில் முன்னோர்களை நினைத்துக் காக்கைக்கு உணவிடுவது அந்தத் தொன்மையான வழக்கத்தின் நீட்சியேயாகும்.

"பச்சூன் பெய்த பைந் நிண வல்சி
பொலம் புனை கலத்தில் தருகுவென்"[14]

தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டதை அறிந்த தாய், காக்கையிடம் தன் மகளைத் திரும்பி வருமாறு கூறும் பொருட்டு, "காக்கையே, நீ உன் சுற்றத்தாறோடு சேர்ந்து வயிறார உண்ணும்படிப் பசிய ஊனைச் சமைத்து அவ்வுணவினை உனக்குப் பலியாகத் தருவேன்" என்று இரந்து கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

திருவுடை வியல் நகர் வரு விருந்து அயர்மார்,
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுந்த
கொக்கு உகிர் நிமிரல் மாந்தி..."[15]

செல்வம் பொருந்திய அகன்ற மனையில் வரும் விருந்தினரை வரவேற்றுப் போற்றுவதற்காகப் பொன்னாலாகிய தொடியையுடைய மகளிர் உணவு சமைத்தனர். அவ்வுணவில் கவளம் எடுத்து முற்றத்தில் பலியாக இட்டனர். பலியாக இட்டதும் கொக்கின் நகம் போன்ற சோற்றைப் பசிய கண்ணையுடைய காக்கை தின்னும்; அதன் பிறகே விருந்தினருக்கு உணவு பரிமாறப்படுகிறது. சங்க காலத்திலே காக்கைக்கு உணவு வைக்கப்படும் வழக்கம் இருந்ததை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

"மாசு இல் மரத்த பலி உண் காக்கை
வளி பொரு நெடுஞ் சினை தளியொடு தூங்கி..." [16]

மாசற்ற மரத்திலிருந்து மக்கள் இடுகின்ற பலிச்சோற்றை உண்ணுகின்ற காக்கை, காற்று மோதும் நெடிய கிளையிலிருந்து தன்மேல் விழுகின்ற மழைத்துளியோடு அசைந்து கொண்டிருக்கும். வெற்றிகொள்ளும் போரையுடைய சோழரது கழார் என்னும் ஊரில் பல்வேறு வகையான பலிச் சோற்றுக் கொடையோடு அளிக்கப்பெறும் அளவில்லாத சோற்றை ஊன் துண்டங்களோடு கூடிய பெருவிருந்தாகப் பெறுவதற்கு அக்காக்கைகள் காத்துக்கிடப்பதாகப் புலவர் கூறுகிறார்.

"அருந் திறல் மரபின் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும் பெறற் பிண்டம்...
நெய்த்தோர் தூஉய நிறை மகிழ் இரும் பலி" [17]

முரசு உறை கடவுளுக்கு வழிபாடு செய்வோனாதலால் 'உயர்ந்தோன்' எனப்பட்டான். அக்கடவுளுக்கு இரத்தக் கலந்த பிண்டம் வைத்த உணவைப் பேய்மகளும், எறும்பு மொய்க்காமல் காக்கையும் பருந்தும் உண்ணும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"செஞ்சோற்ற பலி மாந்திய
கருங்காக்கை கவவு முனையின்" [18]

கருங்காக்கைகளுக்குக் குருதி கலந்த சோற்றுப்பலி இடும் வழக்கம் சங்க காலத்தில் நடைமுறையில் இருந்ததை இப்பாடல் வழியாகக் காண முடிகிறது.

## முரசுக்குப் பலியிடுதல்

தமிழர்களின் வாழ்வியலில் முரசு என்பது வெறும் அறிவிப்புச் சாதனமாகத் திகழாமல், தெய்வத்தன்மை பொருந்திய ஒரு வழிபாட்டுப் பொருளாகவே மதிக்கப்பட்டது. போர்க்களத்தில் வெற்றியைத் தேடித்தரும் ஆற்றல் முரசுக்கு இருப்பதாக மக்கள் நம்பினர். சங்க காலத்தில் சோழ மற்றும் சேர மன்னர்கள் முரசுக்குச் செய்த வழிபாடுகள் குறித்துச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன.

"ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித் தார்
பொலங் குழை உழிஞையொடு, பொலியச் சூட்டி
குருதி வேட்கை உரு கெழு முரசும்"[19]

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் முரசின் தன்மையினை எடுத்துக் கூறும் பொருட்டு, பொலிவுடன் குருதியைப் பலிகொள்ளும் வேட்கை உடையதாயும், அச்சம் தருவதாயும் நின் முரசு விளங்குகின்றது என்று அதன் பெருமை கூறப்பட்டுள்ளது.

"நீள்மொழி மறவர் எறிவனர் உயர்ந்த
வாள்மின் ஆக, வயங்குகடிப்பு அமைந்த
குருதிப் பலிய முரசுமுழக்கு ஆக" [20]

சேரமான் கடலோட்டிய வெல்கெழு குட்டுவனின் முரசுக்குப் பலியிடுதலைக் கூறும் பொருட்டு, மறவர் பகைவர் மேல் ஓச்சுவதற்காக எடுத்த வாள் மின்னலாகவும், குறுந்தடி கொண்டு அடிக்கப்படுகின்ற குருதிப் பலியூட்டப் பெற்ற முரசின் சத்தோடு மழை பெய்யும் என்று முரசின் சிறப்பினைப் புலவர் விளக்குகிறார்.

## மலைக்குப் பலியிடுதல்

தமிழர் வாழ்வில் நிலத்தை வெறும் நிலப்பரப்புகளாக மட்டும் பார்க்காமல், தெய்வங்கள் உறையும் புனித இடங்களாகக் கருதினர். மலைச்சரிவுகளிலும் அருவிகளிலும் உறைந்திருக்கும் தெய்வங்களை மகிழ்விக்கவும், மழையும் வளமும் பெறவும், கொடிய விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும் சங்க கால மக்கள் பலியிடும் சடங்குகளை மேற்கொண்டனர்.

"அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்
கடவுள் ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து" [21]

தலைவனின் ஊரின் பெருமையைக் கூறும் பொருட்டு, ஓங்கி நிற்கும் மலை மேலதாகிய கடவுளை வழிபடும் பொருட்டுத் தன் சுற்றத்தாற்றோடு விரும்பி எழுந்து மலைக்குப் பலியை இட்டு நீர் விளக்கினான். மலை அப்பலியை உண்ணுமாறு நிற்கும் என்று புலவர் கூறுகிறார்.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழரின் சமய மற்றும் சமூக வாழ்வில் பலியிடுதல் என்பது வெறும் சடங்கோடு நின்றுவிடாமல், இயற்கையோடும் தெய்வங்களோடும் மனிதன் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் திகழ்ந்துள்ளது. இயற்கைப் பேரிடர்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும், குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கும், கொற்றவைக்கும், காமனுக்கும், பேய்க் கடவுள்களுக்கும் குருதி கலந்த பலிச்சோறு, தினை, மாமிசம், ஆட்டுக்கிடாய் போன்ற உயிர்ப்பலிகள் வழங்கப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. நாட்டின் அதிகாரக் குறியீடாக விளங்கிய வீர முரசுக்கு போரில் வெற்றி வேண்டி உயிர்ப்பலியும் குருதிச்சோறும் படைக்கப்பட்டன. மேலும், காக்கைக்கு உணவு அளிப்பது முன்னோர்களை வணங்கும் தொன்மையான மரபாகவும், மலைகளைத் தெய்வமாக உறைவிடமாகக் கருதிப்

படையலிடுவது தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாகவும் விளங்கின. சுருக்கமாகக் கூறின், சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை முறையில் பலியிடுதலும் படையலிடுதலும் இயற்கையோடு இயைந்து வாழ்வதற்கான ஆன்மீகச் சடங்குகளாகவும், சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வழிமுறைகளாகவும் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளன என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

## சான்றெண் விளக்கம்

1. பாலசுப்பிரமணியன். கு. வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., ஐங்குறுநூறு தொகுதி - 1 (மூ.உ) பா. 259, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. (மூ.உ)., பா. 362, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. மோகன். இரா., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -1 (மூ.உ)., திருமுருகாற்றுப்படை., பா.வரி. 229, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. விசுவநாதன். அ., முனைவர் (உ.ஆ), 2017., கலித்தொகை (மூ.உ) பா. 109, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. செயபால்., இரா., முனைவர்., (உ. ஆ) 2017., அகநானூறு தொகுதி - (மூ.உ)., பா. 142, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி -1 (மூ.உ) பா. 52, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. மேலது., பா. 143.
8. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ) 2017., நற்றினை (மூ.உ)., பா. 73, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
9. ஆலிஸ். அ., முனைவர்., (உ.ஆ), 2017., பதிற்றுப்பத்து (மூ.உ) பா. 79, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

10. செயபால். இரா., முனைவர்., (உ.ஆ)., 2017., அகநானூறு தொகுதி -2 (மூ.உ) பா. 369, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

11. சுப்பிரமணியன். பெ., முனைவர்., (உ.ஆ)., 2017., பரிபாடல் (மூ.உ) பா. 11, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

12. மோகன். இரா., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -1 (மூ.உ)., பெரும்பாணாற்றுப்படை., பா.வரி. 104, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

13. நாகராசன். வி., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -2 (மூ.உ)., மதுரைக்காஞ்சி., பா. 607, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

14. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., ஐங்குறுநூறு தொகுதி -2 (மூ.உ) பா. 391,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

15. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ) 2017., நற்றினை (மூ.உ)., பா. 258, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

16. மேலது., பா. 281.

17. ஆலிஸ். அ., முனைவர்., (உ.ஆ), 2017., பதிற்றுப்பத்து (மூ.உ) பா. 30, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

18. மோகன். இரா., முனைவர்., (உ.ஆ), 2017., பத்துப்பாட்டு தொகுதி -1 (மூ.உ)., பொரும்பாணாற்றுப்படை., பா.வரி. 183, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

19. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி -1 (மூ.உ) பா. 50, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

20. பாலசுப்பிரமணியன். கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி -2 (மூ.உ) பா. 369, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

21. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ) 2017., நற்றினை (மூ.உ)., பா. 165, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.